*கவனிக்க.- 04.05.2012 ஆந் திகதிய வர்த்தமானியின் பகுதி I : தொகுதி (III) பிரசுரிக்கப்படவில்லை.*

# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

අංක 1758 - 2012 මැයි මස 11 වැනි සිකුරාදා - 2012.05.11

*1758 ஆம் இலக்கம் - 2012 ஆம் ஆண்டு மே மாதம் 11 ஆந் திகதி வெள்ளிக்கிழமை*

*(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)*

## பகுதி II – சட்ட சம்பந்தமானது

*(ஒவ்வொரு மொழியின் ஒவ்வொரு பகுதியும் வெவ்வேறாக கோவை செய்து வைப்பதற்காகத் தனித்தனிப் பக்கங்கள் தரப்பட்டுள்ளன.)*


| | பக்கம் | | பக்கம் |
|---|---|---|---|
| சட்டங்கள் | - | பிசுக்கால் மால்சல்மாரின் நியமனங்கள் | - |
| சட்டமூலங்கள் | - | பிசுக்கால் விற்பனை பற்றிய அறிவித்தல்கள் | - |
| மேன்முறையீட்டு நீதிமன்றச் சட்ட அறிவித்தல்கள் | - | மரணசாதன வழக்குகளின் அறிவித்தல்கள் | - |
| உயர் நீதிமன்ற அறிவித்தல்கள் | - | சட்டக் கல்விச் சபையின் அறிவித்தல்கள் | - |
| உயர் நீதிமன்ற குற்றவிசாரணை பற்றிய அறிவித்தல்கள் | - | நொத்தாரிசுமார் பட்டியல் | - |
| மாவட்ட நீதிமன்ற, நீதிவான் நீதிமன்ற அறிவித்தல்கள் | - | நானாவித அறிவித்தல்கள் | 56 |
| கடனிறுக்க முடியாமைக்கான வழங்குகளின் அறிவித்தல்கள் | - | பிசுக்கால் மார்சல்மாரின் நியமனங்கள் | - |


### வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிப்பதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளல் சம்பந்தமான

### முக்கிய அறிவித்தல்கள்

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளின் இறுதியில், ஒவ்வொரு மாதத்தின் முதல் வாரத்தின், வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளில் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதியும் நேரமும் சம்பந்தமான அறிவித்தல்களுக்கு கவனம் கோரப்படுகின்றது.

வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் தினம் அவை **வர்த்தமானியில் பிரசுரமாகும் திகதிக்கு இரண்டு வாரங்களுக்கு முந்திய வெள்ளிக்கிழமை, நண்பகல் 12.00 மணியாகும்**. இறுதித் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்களான, பதவி-வெற்றிடங்கள் மற்றும் பரீட்சைகளுக்கு விண்ணப்பம் கோரும் அறிவித்தல்கள், கேள்விப்பத்திர அறிவித்தல்கள் அத்துடன் ஏல விற்பனைத் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்கள் என்பன அவ்வவ் அறிவித்தல்களில் உள்ள விடயங்களில் அக்கறை செலுத்துவோர் ஆக்கபூர்வமாக பயனுறும் வகையில் அவை பிரசுரிக்கப்படுவதற்காக அரசாங்க அச்சகத்துக்கு அனுப்பிவைக்கப்படும் திகதியிலிருந்தும் அத்துடன் அவை பிரசுரமாகும் திகதியிலிருந்தும் போதிய கால அவகாசம் கொண்டதாக தயாரிக்கப்பட்டு அனுப்பிவைக்கப்பட வேண்டும் என சகல அரசாங்க திணைக்களங்கள், கூட்டுத்தாபனங்கள், சபைகள் ஆகியன அறிவுறுத்தப்படுகின்றன. அறிவித்தல்கள் தொடர்பிலான பிழைதிருத்தங்கள் சம்பந்தமாக செய்யப்படும் முறைப்பாடுகள் மற்றும் விசாரணைகள் என்பன வர்த்தமானியில் குறிப்பிட்ட அறிவித்தல்கள் பிரசுரமாகிய திகதியிலிருந்து மூன்று மாதங்கள் கழிந்த பின்னர் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா என்பதனை கவனத்திற்கொள்ளவும்.

வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரமாகும் சகல அறிவித்தல்களும், அவை பிரசுரமாகும் திகதிக்கு **இரண்டு வாரங்களுக்கு முன்னர்**, அதாவது 2012, மே மாதம் 18 ஆந் திகதி வெள்ளிக்கிழமை பிரசுரிக்கப்படவேண்டிய அறிவித்தல்கள் 2012, மே மாதம் 04 ஆந் திகதி நண்பகல் 12.00 மணிக்கு அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக்கூடியவாறு தபால் மூலம் அல்லது நேரில் சேர்ப்பிக்கப்பட வேண்டும்.

**லக்ஷ்மன் குணவர்தன,**
*அரசாங்க அழுத்தகர்.*

*அரசாங்க அச்சுத் திணைக்களம்,*
*கொழும்பு 8,*
*2012 ஆம் ஆண்டு சனவரி மாதம் 01 ஆந் திகதி.*

# நானாவித அறிவித்தல்கள்

## மேல் மாகாண மேல் நீதிமன்றத்தில் (கொழும்பில் அமர்வு இடம்பெறும்) சிவில் நீதி பரிபாலன செயற்பாட்டில்

டீறெக்டரீஸ் லங்கா (பிறைவேட்) லிமிட்டெட் நிறுவனத்தை மூடிவிடுதல் விடயத்தில் ;

விண்ணப்ப இல. : எச் சி சிவில் 14/2012 (கோ)
தன்மை : மூடிவிடுதல்

மற்றும்

2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க சட்டம் விடயத்தில்.

டீறெக்டரீஸ் லங்கா (பிறைவேட்) லிமிட்டெட், லெவல் 4, இல. 2, காசல் லேன், கொழும்பு 4.

............................... மனுதாரர்.

மேல் மாகாண மேல் நீதிமன்றத்தின் சிவில், நீதி பரிபாலன செயற்பாட்டில் (கொழும்பு அமர்வு) மேற்குறிப்பிட்ட கம்பனியை 28.03.2012 இல் மூடிவிடுவதற்கான மனுவொன்று டீறெக்டரீஸ் லங்கா (பிறைவேட்) லிமிட்டெட், லெவல் 4, இல. 2, காசல் லேன், கொழும்பு 4 என்ற நிறுவனத்தினால் குறித்த நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றும் குறித்த மனு 31.05.2012 இல் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட பணிக்கப்பட்டுள்ளது என்றும் குறித்த மனு தொடர்பாக தீர்ப்பு வழங்குவதை ஆதரிக்க அல்லது எதிர்க்க விரும்புவோர் அல்லது குறித்த கம்பனியின் பங்களிப்பாளர் நேரில் அல்லது தமது சட்டத்தரணி மூலம் சமுகமளிக்கலாம் என்றும் குறித்த மனுவின் பிரதி ஒன்று மேற்படி சமுகமளிப்பவர் கோரும் பட்சத்தில் அதற்கென விதிக்கப்பட்ட கட்டணத்தை செலுத்துவதன் மூலம் அவருக்கு அதன்கீழ் கையொப்பம் இடப்பட்டவரால் வழங்கப்படும் என்றும் இத்தால் அறிவிக்கப்படுகிறது :-

எப். ஜே. அன்ட் ஜீ. டீ சேரம்,
சட்டத்தரணிகள் நிறுவனம்,
இல. 216, டீ சேரம் பிளேஸ்,
கொழும்பு 10

**குறிப்பு**.- குறித்த மனு மீதான விசாரணையின்போது சமுகமளிக்க விரும்பும் எவரும் தமது மேற்படி விருப்பத்தை மேற்குறிப்பிட்ட எப். ஜே. அன்ட் ஜீ. டீ சேரம் சட்டத்தரணிகள் நிறுவனத்திற்கு எழுத்துமூலம் கையளிக்க அல்லது தபால் மூலம் 30.05.2012, மாலை 6.00 மணிக்கு பிந்தாமல் அனுப்பிவைக்க வேண்டும். அத்தகைய அறிவித்தலில் தனிப்பட்டவரானால் தமது பெயர், முகவரியை அல்லது நிறுவனமானால் அதன் பெயர், முகவரியை குறிப்பிடுவதுடன் சம்பந்தப்பட்டவரால் கையொப்பமிட்டும் இருக்க வேண்டும்.

5-181

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்தில் பதிப்பிக்கப்பெற்றது.